# 32

# சிலுவையின் இடறல்

## மத்தேயு 16:16-23; 26:31-35;

## மாற்கு 8:27-33; 14:27-31

*"நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார். ஆகிலும், யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமா யிருக்கிறார்" (1 கொரிந்தியர் 1:23, 24).*

மாபெரும் அப்போஸ்தலரான பவுல், *"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக"* என்று கூறினார் (கலாத்தியர் 6:14அ). சிலுவையின் வேதனையில் இருந்து சிலுவையின் மகிமை வெளிவருகிறது. தேவனுடைய குமாரன் சிலுவையில் தமது மரணத்தை மகிமையுள்ள வெற்றியாகத் திருப்பினார்.

மக்களுக்காகத் தேவன் கொண்டிருந்த மாபெரும் இருதயம் சிலுவையில் வெளிப்படுத்தப்பட்டது. அவர் தமது குமாரனின் மரணத்தின் மூலமாக எல்லாவற்றையும் கூறினார். இதைக்காட்டிலும் அவர் வேறு என்ன அதிகமாகக் கூறமுடியும்? சிலுவையின் மகிமையை நாம் காணக்கூடாதபடிக்கு நம்மைப் பார்வையற்றுப் போகச்செய்வதற்குச் சாத்தான் மிகக்கடினமாக முயற்சி செய்தான். நாம் அதை மறுக்கும்படிக்கு, அவன் நமது மதி நுட்பத்தை எதிர்ப்புள்ளதாகவும் இழிவானதாகவும் ஆக்குவதை நாடி இருந்தான். ஆகையால் "சிலுவையின் இடறலை" உணர்ந்தறிதல் என்பது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. தேவன் சிலுவையின் மூலமாக நம்மை இரட்சிக்கத் தேர்ந்துகொண்டார், ஆனால் பிசாசானவன், நாம் அதை ஏளனம் செய்யும்படி வழிநடத்த நாடினான். "சிலுவையின் இடறலை" நாம் புரிந்துகொள்ளாவிட்டால், நாம் அனேகமாக, இந்த உலகத்தின் தேவனான, பிசாசானவன் என்ன செய்கிறான் என்பதைப் புரிந்துகொள்ளத் தவறிவிடுவோம்! அவனது நுட்பங்களைப் புரிந்துகொள்ளத் தவறுதல் என்பது அவற்றினால் நாம் வஞ்சிக்கப்பட நம்மையே அனுமதிப்பதாகிவிடும்!

பிரசங்கங்கள், பாடல்கள், புத்தகங்கள், கலை மற்றும் அன்றாட உரையாடல்கள் யாவையும் சிலுவையுடன் அதிர்கின்றன. பின்பு எவ்வாறு

அதில் இடறல் எதுவும் இருக்க முடியும்! சிலர், "இனிய குழந்தை இயேசு" பற்றி அல்லது "ஒரு சிலுவையில் மரிக்கிற உதவியற்ற மனிதன்" பற்றிப் பேசுகின்றனர், மற்றும் இயேசுவை "தீங்கு விளைவிக்காத ஒரு மனிதர்" என்ற வகையில் சித்தரிக்கின்றனர். இது சிலுவையின் வரலாற்றை உணர்வுப்பூர்வமான தேவதைக் கதையாக்குவதாகக் காணப்படுகிறது. புகழ்பெற்ற பிரசங்கங்கள், சிலுவையில் உள்ளாக அமைந்த வன்முறை, இரத்தம் மற்றும் கொடுமை ஆகியவற்றை நீக்கிப்போட்டுள்ளன; அது சிலுவையை வேதனையற்றதாகவும் அதன்விளைவாக மலட்டுத்தன மானதாகவும் ஆக்கியுள்ளன.

அனேகமாக, இன்றைய நாட்களில் வாழ்கிற எவரொருவரும் சிலுவையில் அறையப்படுதல் ஒன்றைக் கண்டிருப்பதில்லை. அப்படிப் பட்ட மரணம் வார்த்தைகளுக்கு அப்பால் சிறுமையானதாக உள்ளது. நமது காட்சியமைவில், அதன் வேதனையைப் புரிந்துகொள்ளுதல் என்பது நமக்கு ஏறக்குறைய சாத்தியமற்றதாகவே உள்ளது. நமது சபைக் கட்டிட அமைப்புகளில் நாம் சிலுவையை வைக்கிறோம்; நாம் அதை ஒரு அழகுமிக்கதாகவும் ஆபரணமாகவும் நினைக்கிறோம். இருப்பினும் சிலுவை என்பது "ஏற்புடைய கட்டிடக்கலை நுட்பமாக" மாத்திரம் இருப்பதில்லை; அது "ஒரு அர்த்தம் நிறைந்த வரலாறாக" மாத்திரம் இருப்பதில்லை. மனிதன் சிலுவையை மகிமைப்படுத்துகிற அதே வேளையில், இயேசுவின் மரணத்தினுடைய உள்-அர்த்தத்தைத் தவறவிடுகிறான். சிலுவை என்பது உணர்வுரீதியான கதைகூறுதலாக இருப்பதில்லை; அது மனிதரின் பாவங்களுக்காகத் தேவனுடைய குமாரன் மரணம் அடைந்த வரலாற்றுப் பூர்வமான நிகழ்ச்சியாக உள்ளது.

நாம் வாழ்வை விரும்புகிறோம்; சிலுவை என்பது மரணத்தின் எடுத்துரைப்பாக உள்ளது. நாம் வெற்றிக்கு ஏங்குகிறோம்; சிலுவை தோல்வியுடன் தொடங்குகிறது. நாம் சமாதானத்தை நாடுகிறோம்; சிலுவை யுத்தத்திலிருந்து விளைகிறது. நாம் அழகை நேசிக்கிறோம்; சிலுவை அழகற்றதாக உள்ளது. சிலுவையானது அளவையியல்ரீதியாக மனிதகுலம் பெற்றிருக்க விரும்புவதில் இருந்து வேறுபடுகிறது. விமர்சகர்கள், "தேவன் தேவனாக இருக்க என்ன தைரியம்!" என்று மறுக்கின்றனர். இருந்தபோதிலும் அவர் அப்படியே இருக்கிறார், அப்படியே இருந்தார், மற்றும் எப்போதும் அப்படியே இருப்பார்! நீதியுள்ள ஒரே தேவன் என்ற வகையில் அவர், தமது குமாரன் நமது பாவங்களைச் சுமப்பதற்காகச் சிலுவையின்மீது வேதனையுள்ள மரணத்தை அடைவதைத் தேர்ந்துகொண்டார்.

இயேசு, தாம் இடறல்களைக் கொண்டுவரப் போவதாகத் தமது சீஷர்களிடம் உறுதியாகக் கூறினார் (மத்தேயு 16:16-23; 26:31-35; மாற்கு 8:27-33). கிறிஸ்து, தம்மைப் பின்பற்றுபவர்கள் தம்மைக்குறித்து இடறல் அடைவார்கள் என்றுகூறி "இடறலடைதல்"[1] என்று அர்த்தம்கொள்ளும் கிரேக்க வார்த்தையைக்கூடப் பயன்படுத்தினார் (மாற்கு 14:27-31; யோவான் 6:60, 61).

மக்கள் இயேசுவினாலும், சிலுவையின்மீது அவரது மரணத்தினாலும் இடறலடைந்தனர்! சிலுவையில் அறையப்பட்ட சாதாரணக் குற்றவாளி

யொருவன் தங்களின் இரட்சகராக இருக்க முடியும் என்று அவர்கள் காணமுடியாதிருந்தனர். கண்ணியமான ரோம சமூகத்தில் "சிலுவை" என்ற வார்த்தை ஏறக்குறைய நயமற்றதாக, பொது இடத்தில் கூறப்படாது மூடப்பட்டதாக இருந்தது. இயேசு சிலுவையில் அறையப்படுதல் என்ற நினைவே பேதுருவுக்கு மிகவும் அதிகமானதாக இருந்தது; அதிலிருந்து அவரைப் பாதுகாக்கப் பேதுரு முயற்சி செய்தார். அவர் கலங்கிப் போயிருந்தார். தேவன் விஷயங்களை அவர் வழியில் கையாளுவதை நாம் விரும்புவதில்லை! மரத்தை (சிலுவையை) ஒரு சாபமாகச் சித்தரித்த பழைய ஏற்பாட்டு வேதவசனத்தைப் பேதுரு அறிந்திருந்தார் (உபாகமம் 21:23; நடபடிகள் 5:30; கலாத்தியர் 3:13ஐக் காணவும்); இயேசு அப்படிப்பட்ட ஒரு மரணத்தினால் பாடுபடுவதைப் பேதுரு விரும்ப வில்லை.

இயேசு பேதுருவைச் சாத்தானுடன் அடையாளப்படுத்தி, அவருக்கு விரைவாகவும் உறுதியாகவும் மறுசெயல் செய்தார் (மத்தேயு 16:23). மக்கள் தங்கள் விரோதிகளைக் கடிந்துகொள்ள முடியும், ஆனால் அவர்கள் தங்கள் நண்பர்களை எவ்வாறு கடிந்துகொள்வது என்பதை அறியாதிருக்கின்றனர். இயேசு அவரைக் கடிந்துரைத்து, தமது வழியில் இருந்து விலகிச் செல்லு மாறு அவருக்குக் கூறினார், ஏனெனில் அவர் சிலுவையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்.

சிலுவை என்பது இயேசுவுக்கு யுத்தகளமாக இருந்தது. அவர் கெத்செமனேயில் "இரத்தவியர்வை" வியர்த்து, சாத்தியமானால் வேறொரு வழியைக் கண்டறியுமாறு தேவனிடத்தில் ஜெபித்தார் (லூக்கா 22:40-44). சிலுவையைத் தவிர வேறுவழி இல்லாதிருந்தது.

பவுல் சுவிசேஷத்தைக் குறித்து வெட்கப்படவில்லை (ரோமர் 1:16, 17). நாம் வெட்கப்படுகிறோமா? சிலுவையை மாற்றுதல், அதைக் குறைத்துப் போடுதல் என்பதே எப்போதும் சோதனையாக இருக்கிறது. பவுல் கலாத்தியர் 5:11ல் "சிலுவையின் இடறல்கள்" பற்றிப் பேசியது மாத்திரமின்றி, கிறிஸ்துவை "இடறுதலுக்கான கன்மலை" என்றும் வெளிப்படுத்தினார் (ரோமர் 9:31-33). சிலுவையானது யூதர்களுக்கு இடறுதலுக்கான கல்லாகவும் புறஜாதி யாருக்கு மதியீனமாகவும் இருந்தது என்று போதித்தார் (1 கொரிந்தியர் 1:17-25).

நாம் சிலுவையைப் புரிந்துகொள்ளாத வரையில் இயேசு கொண்டு வந்த இரட்சிப்பைப் புரிந்துகொள்ள மாட்டோம். பாவத்திற்கான நீதியான தண்டனையின் மூலமாகவே பாவத்தைத் தோல்வியடையச் செய்யமுடியும் என்று தேவன் சிலுவையில் கூறினார். சிலுவையைப் பொருட்படுத்தத் தேவை இல்லையென்றால், எதையுமே பொருட்படுத்தத் தேவையில்லை!

அனேகமாக இந்த பூமியின்மீது, சிலுவையைப் போன்று வேறெதுவுமே முரண்கொண்டதாக, இடறுதலாக அல்லது பிரிவினை ஏற்படுத்துவதாக இருப்பதில்லை. இயேசு செய்தது போன்று மற்றும் செய்கிறது போன்று எவரொருவரும் எந்தக்காலத்திலும் மக்களைக் கோபம் அடையச் செய்ததில்லை!

மனிதனல்ல, ஆனால் தேவனே சரியானவராக இருப்பதால் சிலுவை

இடறுதலுக்குரியதாக உள்ளது. (1) பாவம் என்பது நமது பிரச்சனையாக இருப்பதால் தேவன் சரியானவராக இருக்கிறார். (2) சிலுவையே பாவத்திற்கு ஒரே பதிலாக இருப்பதால் தேவன் சரியானவராக இருக்கிறார்! பாவிகள் இழந்துபோகப்பட்டு, நம்பிக்கையற்ற நிலையில் நரகத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். இது நமக்கு இடறல் உண்டாக்குகிறது. நம்மில் பெரும்பான்மையானவர்கள் இரட்சிப்பு தேவைப்படுமளவுக்குப் போதுமான விகிதம் விழுந்துபோயிருப்பதை ஒப்புக்கொள்ள இயலாது. பாவிகள் தங்களின் குற்றத்தை அறியவோ அல்லது அவைகள் நினைவூட்டப்படுவதையோ விரும்புவதில்லை. நாம் பாவிகளாயிருக்கிறோம் என்று கூறுதல் நமது மேட்டிமையான, சுயநலமிக்க, முரட்டுத்தனமான மற்றும் பாவம் நிறைந்த இருதயங்களுக்கு முரண்படுகிறது. தேவபக்தியற்றவர்களுக்காக அதாவது பாவிகளுக்காக கிறிஸ்து மரித்தார் (ரோமர் 5:6-8). நாம் யாவருமே இதற்கு தகுதிப்படுகிறோம்!

*பாவிகள் இரட்சிப்புக்குத் தகுதியாக இருப்பதில்லை, அதை அவர்கள் ஈட்ட இயலாது மற்றும் அதை அவர்கள் விலைகொடுத்து வாங்க இயலாது என்பதால் சிலுவை இடறல் உண்டாக்குகிறது.* இங்கு நாம் கிருபையின் இடறலைக் காணுகிறோம்! மனிதன் தன்னைத்தானே இரட்சித்துக்கொள்ள முடியாது. இருப்பினும், நீதி கேட்டுக்கொள்வதை கிருபை அளிக்கிறது. அவையாவற்றையும் இயேசு செலுத்தினார். பாவம்நிறைந்த மனிதன், இயேசு இல்லாத நிலையில் நித்தியத்திற்கும் உதவியற்றவனாக இருக்கிறான்! மனிதன் சிலுவையை கற்பனை செய்யவோ அல்லது விளக்கப்படுத்தவோ இயலாது - அவன் அதை தாழ்மையுடன் விசுவாசிக்க மாத்திரமே முடியும். இது நமக்கு இடறல் உண்டாக்குகிறது.

*நாம் தேவனுக்கு "நமது வழியில்" பதில்செயல் செய்யமுடியாததால் சிலுவை இடறல் உண்டாக்குகிறது.* இயேசு, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்திற்கு வரான்" என்று கூறினார் (யோவான் 14:6). அவரது கூற்று இறுக்கமானதாக, குறுகலானதாக, தனிப்பட்டதாக, சகிக்கமுடியாததாக, மற்றும் தீர்ப்பிடுவதாக உள்ளது ... ஆனால் அது சத்தியமாக இருக்கிறது. அப்படிப்பட்டதொரு அறிவித்தல் இடறலாயிருக்கிறது (நடபடிகள் 4:11, 12ஐக் காணவும்). நாம் மனுஷரையா தேவனையா, யாரைப் பிரியப்படுத்த நாடுகிறோம்? (யோவான் 12:42, 43; நடபடிகள் 5:29.) பாவியெவரும் இயேசு இல்லாமல் இரட்சிக்கப்பட முடியாது. தேவன் இட்ட இடத்தில் சிலுவையை இடுவதற்கான நேரம் நமக்கு வந்துள்ளது. நம்மை ... நம்மிடத்தில் இருந்து இரட்சிப்பதற்கு ... தேவன் தாமே ... தம்மையே ஒப்புக்கொடுத்தார்!

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*

குறிப்பு

[1]"இடறலடைதல்" என்பதற்கான கிரேக்க வார்த்தையான *skandalizo* என்பது "புறம்பே விழுந்து போகுதல்" என்று அர்த்தப்படுகிறது.